9

# கண்ணம்மா என் குழந்தை

1. சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா !
செல்வக் களஞ்சியமே !
என்னைக் கலிதீர்த்தே-உலகில்
ஏற்றம் புரியவந்தாய் !

2. பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா !
பேசும்பொற் சித்திரமே !
அள்ளி யணைத்திடவே-என் முன்னே
ஆடிவருந் தேனே !

3. ஓடி வருகையிலே - கண்ணம்மா !
உள்ளங் குளிருதடீ
ஆடித்திரிதல் கண்டால்-உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ

4. உச்சி தனை முகந்தால்-கருவம்
ஓங்கி வளருதடீ
மெச்சி யுனை யூரார்-புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ

5. கன்னத்தில் முத்தமிட்டால்-உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ
உன்னைத் தழுவிடிலோ-கண்ணம்மா !
உன்மத்த மாகுதடீ

6. சற்று முன் முகஞ்சிவந்தால்-மனது
சஞ்சல மாகுதடீ
நெற்றி சுருங்கக் கண்டால்-எனக்கு
நெஞ்சம் பதைக்குதடீ

7. உன்கண்ணில் நீர்வழிந்தால்-என்னெஞ்சில்
உதிரங் கொட்டுதடீ
என்கண்ணில் பாவையன்றோ?-கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?

8. சொல்லு மழலையிலே - கண்ணம்மா?
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே-எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்

9. இன்பக் கதைக ளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே - உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

10. மார்பி லணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ?

- சுப்பிரமணிய பாரதியார் -